



ஓலை 93 | ஓசை 216 | அக்டோபர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

## பொருள்

அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை.
தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும்போது வடியும் கண்ணீரே அன்பு உள்ளத்தைக் காட்டிவிடும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## ஒருவனைப் பற்றி ஓரகத் திரு!

பாவகை : எண்சீர் மண்டிலம்




ஒற்றுமையைப் பற்றியேதான் காக்கை வாழும்;
உழைப்பினையும் பற்றுவதும் எறும்பே யாகும்;
கற்றறியும் பாடமென்ன பெண்டீர் காணீர்;
கழுகைப்போல் கொத்தியுண்ணும் நட்பும் வேண்டா;
ஒற்றுக்கள் இல்லாமல் பொருளும் சொல்லில்
ஒன்றியேதான் உயர்ந்தேதான் உரைப்ப தேது?
குற்றெழுத்தோ நெட்டெழுத்தைப் பற்றி நிற்கும்
கூடிவாழும் அளபெடையாய் வாழ்க்கை வேண்டும்!

நாற்றுக்குள் ஓடுகின்ற நண்டைத் தேடி
நாரையது ஓடுதல்போல் பிரிந்தே ஓடா,
ஊற்றுக்கண் பெருக்கெடுத்து ஓடு தல்போல்
உள்ளத்தில் அன்பூற்றுப் பெருக்கெ டுக்க,
காற்றைப்போல் தழுவிவாழும் பற்றும் பெற்று,
கனிந்தேதான் பொறையுடனே வாழ்தல் தானே
மாற்றில்லா பெரும்வாழ்வே என்று ணர்ந்து
மனமுவந்து ஒன்றிவாழ வேண்டுந் தானே!

வெண்பாவுள் வெண்டளையும் பற்றி யுள்ள
மேலுயர்ந்த யாப்பினது உச்சம் போன்றே
பெண்பாலும் ஆண்பாலும் துணையாய் ஒன்றி
பெரிதுவக்க ஓரகத்தே இருத்தல் வேண்டும்;
கண்மணியை இமைகாக்கும் பாங்கி லன்றோ
பெண்ணாணும் ஒருவருக்கொ ருவரி ணைந்தே
பண்ணோடு இசையிணைந்த பாங்கு டன்தான்
பற்றியேதான் ஓரகத்தே இருத்தல் வேண்டும்!




**இலக்கணக் குறிப்பு: எண்சீர் மண்டிலம்**

எட்டுச் சீர்களைப் பெற்று நான்கடியாக வரும். எட்டு வரிகளாக மடக்கி உள்தள்ளி எழுதவேண்டும், ஒரு வரியை அரையடியாகக் கொண்டு இரண்டு காய், புளிமா, தேமா சீர்களாக எழுதுதல் வேண்டும். அதாவது காய் + காய்+ மா+ தேமா சீர்களாக எழுதுதல் வேண்டும்.

# நட்பு

பாவகை : எண்சீர் விருத்தம்.

விளம்+ மா + விளம் + காய்.

உள்ளக எண்ணம் உணர்விலும் ஒன்றிடவே
உயர்விடம் பெற்றே உவப்பினை அளித்திடுமே.

கள்ளமாய் ஏதும் கறுவமே கொள்ளாமல்
கவனமாய் உறுதி கடிதுடன் பெறலாமே.

அள்ளியே பருக அன்பையே ஈந்திடுமே.
அளந்திட முடியா அளவலும் இருந்திடுமே.

மள்குதல் இல்லை மள்ளமும் பெற்றிடுமே
மள்ளமாய் நாளும் மனவலி நல்கிடுமே.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

மரத்தில் வந்தமர்ந்த பறவை
புத்தர் மீது அசையும்
நிழல்.

ஊர்ந்து செல்லும் நத்தை
கொத்த வரும் பறவை
துரத்தும் நான்.

தும்பியை பிடிக்க போகும்
சிறுவனின் கைகள்
படபடக்கிறது என்னிதயம்.



கவிஞர் சு.இராஜ்குமார்

# கீரியாய் நஞ்சை முறி

பா வகை: எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்
(விளம்+ விளம்+ விளம்+ விளம்
விளம்+ விளம் +காய் )

நஞ்சினைத் தடவியே நட்புடன் நிற்பரே;
நம்பிய எவரையும் கெடுப்பாரே;
வஞ்சமும் கொண்டுமே வாழ்க்கையில் வழக்கமாய்
வரையறை இன்றியே செய்வாரே;
அஞ்சிடா நெஞ்சுடன் அடுத்தவர் வாழ்விலே
அரவமாய் நுழைந்துமே கொத்துவாரே;
பஞ்சினைப் போலவே மென்மனம் கொண்டுமே
பாங்குடன் தீங்கினைச் செய்வாரே;
நெஞ்சிலே வலிமையும் கொண்டுமே துணிவுடன்
நேர்த்தியாய் நஞ்சினை முறிப்போமே!



கவிஞர் விஜயலஷ்மி கிரளீதரசன், கோவை மாவட்டம்

# படைமாட்சி

## அதிகாரம் : 77




முறையமைந்த உறுப்புகளுடன்
இடையூறுக்கஞ்சாது பகையெதிர்த்து.
போர்வெல்லும் படையே
அரசனுக்கு பெருஞ்செல்வமாம்.

அழிவுவரினும் வலிகுன்றாது
போரெதிர்த்து பகைமேற்செல்லும்.
ஆண்மை புகழ்விளங்கும்
தொல்படைக்கு இயல்வதாம்.

திரள்கடல் போலெழுந்து
ஆர்ப்பரிக்கும் எலிகள்.
ஒருபாம்பின் மூச்சுக்காற்றில்
அத்தனையும் ஒருங்கேயழிந்துபோம்.

மனதிடத்தில் அழிவற்றதாய்
பகைவஞ்சனைக் குட்படாததாய்.
வழிவழித்தொடர் அஞ்சாமையுடையதே
அரசனுக்கு சிறந்தபடையாம்.

சினங்கொண்டெதிர்க்கும் எமனையும்
சிறிதுமஞ்சாது அவனொடு.
கனங்கொண்டெதிர்த்துத் தாக்கும்
ஆற்றலுடையதே நற்படையாம்.

வீரமும் மானமுடன்
தீரத்தன்மையோ டமைந்த.
அரசனுக்குத்தெளிந்த நிலையே
படைக்கு நற்பாதுகாப்பாம்.

பகைஞரின் போர்தாங்கியதை
வெல்லும் நல்வகையறிந்து.
படையறுத்து தடுத்துநிறுத்த
மேற்செல்வதே நற்படையாம்.

போர்வீரமும் பகைதாங்குமாற்றலும்
இல்லையாகிலும் படையது.
சீரணிவகுப்பின் தோற்றத்தால்
பெருமை பெற்றோங்கும்.

ஆள்குறைதலும் கோவெறுப்பும்
பொருளில்லா வறுமையும்.
இல்லாதிருத்தலே படைக்கு
வெற்றிக்கான வழியாம்.

காலங்காலமாய் வீரமறவர்களை
கொண்டதேயானாலும் படையது.
திறமையில்லா தலைவனால்
பெருமையின்றி அழிந்துபோம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சிசு

கும்மிருட்டிலிருந்து
குறிபார்த்துக் கொண்டிருக்கிறது
பிரபஞ்சத்தின்
வெளிச்சப் பிரகாரத்தினுள்
நுழைவதற்கு
கண்ணியமாய்க் கனவு
கண்டு கொண்டிருக்கிறது
கருவறைச்சிசு.



ஆதவன் அழகையும்
நிலவின் நேர்த்தியையும்
பூக்களின் புனிதத்தையும்
விழும் அருவியின் வீரத்தையும்
கண்டுணரும் ஆவலில்.
நியாயமானதும்
தேவையானதும் தான்.

பிரபஞ்சத்தில்
புள்ளியாய் விழுந்ததும்
வீறிட்டழுகிறது
அம்பலப் படுத்தும் அழுகையில்
அகப்பட்டிருக்கும் மனது
சிசுவிற்கு
பல கேள்விகளை முன் வைக்கிறது.

எண்ண ஓட்டத்தில்
நினைத்து மகிழ்ந்த எதுவொன்றையும்
நெருங்க விழையாமல்
உழல்கிறது காலச்சக்கரம்.
காத்திருத்தல் அவசியமென்றும்
அறிந்து கொள்ள நாளாகுமென்றும்
உணர்ந்து கொண்டது
இப்போது இந்தச்சிசு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தீண்டலின் பரிசு

தீண்டத்தகாதவள் என தீட்டுப்பட்டு நின்றவளை
என் அய்யன் தீண்டியதால் தான்
தீண்டத்தகாத தீட்டு திடீர் என திலைத்து போனது
திலைத்த தீட்டில்
திழலை மழலையாய் தீட்டிய சித்திரமே
என் உயிரெனும் திரவியம்
ஆகவே தான் சொல்கிறேன்
அவள் தீட்டு பட்டவள் என்றால்
தீண்டத்தகாதவள் என்றாள்
தீட்டால் திலைத்த நாமும் தீட்டானவர்களே
எனில் சிந்தனை கொள்
சிதறிய மானிடமே
திண்ணமாய் இருக்கும் சித்திரம்
தீட்டிய ஒவியனை நகைக்கலாமோ
தன்னுயிரை தானே பகைக்கலாமோ



கவிஞர் பி. வுட்ஷன், முல்லைத்தீவு, (இலங்கை)

## (பாகம் : ஒன்று)

29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை ;
நாகநாட்டரசன் நெடுமுடிக்கிள்ளி மகள் பீலிவளை
சோகமானான் அவள் பெற்ற மகனால்
பாசப் பிள்ளையோடு மணிபல்லவம் வந்தாள்
ராச வம்சத்தை மன்னனிடம் சேர்க்கனும் .



கம்பளச் செட்டியிடம் மகனைக் கொடுத்தாள்
நம்பகமான வணிகன் ,மரக்கலத்தில் பயணம்
பம்பரமாக சுழன்றடித்த காற்றில் மரக்கலம்
கம்பீரம் இழந்து உடைந்து சிதறியது

நம்பிகொடுத்த பிள்ளையை இழந்தார்
அம்பி இராசனிடம் நடந்ததைக் கூறினார்
எம்பிரான் துயரத்தில் எல்லாம் மறந்தான்
விரும்பிய இந்திரவிழா கொண்டாட வில்லை

இந்திரவிழா இல்லை இந்திரன் சினந்தான்
இந்திரன் மன்னன் மக்களை சபித்தான்
மந்திரமாக புகாரை கடல் கொண்டது
பத்திரமாக மாதவி காஞ்சி வந்தாள் .

சமய வாதிகளை சந்தித்துப் பேசினாள்
அமைந்த சமயங்களில் உண்மை இல்லை
அவை எதையும் மனதில் கொண்டிலள்
நிலையான மெய் பொருளை கூறுங்கள்

கூறினார், ''கேட்கும் மெய்ப்பொருளை
அறிக, காட்சியளவை, கருத்தளவை ஆகும்
தெறிக , காட்சியளவை உருவம் உண்டு
மற்றது காரியம் சிந்தித்து செயல்படல்

காட்சி அளவை பார்த்து உணர்வது
சாட்சியாக கண்ணில் படமாக நிற்பது
வீட்டில் இருந்தாலும் நினைவில் கொள்ளும்
காட்சியாக நின்றது கனவாக வரலாம் .

கருத்தளவை காரியம் காரணம் சாமானியம்
திருத்தமாக மூன்று நிலைகள் ஆராய்வது
கருத்து பிழைபட்டு விடுதலும் உண்டு
விருத்தமாக ஒருவருக்கு ஒருவர் மாறுபடும்

பக்கம், ஏதுத்., திட்டாந்தம், உபநயம்
நிகமனம். கருத்தளவை ஐந்து உண்டு
பக்கம், ''இம்மலை நெருப்புடைத்து '', என்றல்
''புகையுடைத் தாதலால் எனல்பொருந் தேது
வகையமை அடுக்களை போல்திட் டாந்தம்
உபநயம் ,'' மலையும் புகையுடைத்து '' என்றல்
நிகமனம் ,''புகையுடைத்தே நெருப்புடைத்து,'' என்றல் .
(அருளுரை தொடரும்)

தொடரும் ...


கவிஞர் ந. திருக்காமு

# தற்பெருமை

அழைப்பாணை வந்து
விருந்தளிக்கல்ல
விலகி நின்று
வெந்த புண்ணில் வேல்
பாய்ச்சலிற்கென்றே
வேதனை அளிக்கிறது
மடைமை யாதும்
கிடப்பில் வரலாற்றின் இருப்பை மறந்து.
வந்து வழி இடம் நல்கி
வாய்க்கு வாக்கு அளக்கும்
இந்த கூட்டத்தை பார்க்கும் போது.

தோரணைகளுக்கு கொடி
அசைந்தாட அல்லக்கைகள்,
அணி வகுப்போருக்கு
இன்பகளிப்பு.
இன்னும் பல

மரத்தின் கிளையில் ஊசலாட
வேர் இட சம்மேளனமின்றி
வேங்கை மரமேற கூடாது.
வேட்கை கொண்ட தாய்நிலம்
எங்கள் இடம்
தகுதி தாரதரம் எங்கள் தன்மானத்தின் முன்
தற்பெருமை செல்லாது.



கவிஞர் வியாத்தன் சீ. லக்ஷ்ஹரன்

# தமிழோர்மை

தீரா இன்னல் இழைக்கும் ஆட்சி!
திக்கு தெரியாமல் தமிழினம்!
மாசு நிறை ஆட்சி
மனம் கலங்கும் தமிழினம்.

செறுநர் செருக்கறுக்கும் தீந்தமிழ் .
தமிழ்க் கதிர் அரும்ப
திராவிடம் இருள் விலகும்
தீங்குறு பகை வீழ்ந்து
தமிழோர்மை வளரும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

புன்னகை விரிகையிலே
பூவெல்லாம் சிரிக்கிறதே

இளந்தளிர் மேனியாளே
இசையான இளந்தென்றலே

இளமையின் இராகமே
இதமான பாடலே



இலக்கணமான காவியமே
தூரிகை ஓவியமே

காதல் காரிகையே
அன்னத்தின் அம்சமே

மெல்லிடை அசைந்திட
என்னுள் ஏழிசையே

தோகை மயிலே
கானமிசைக்கும் குயிலே

வெண்ணிலவின் ஒளியாய்
மின்னிடும் பற்களே

இதயத்தை தாலாட்டும்
உந்தன் சொற்களே

வண்ணங்கள் சிந்திடும்
வடிவழகான வஞ்சியே

அமுதூறும் இதழாலே
முத்திரை பதித்திடு

புன்னகை விரிகையிலே
பூவெல்லாம் சிரிக்கிறதே

எண்ணங்களில் கலந்தே
உன்னுள் வாழ்கிறேன்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஆயிரம் பாடங்கள்



மலர்தல் கடமையென
புன்னகைக்கும் பூவிடம்
பாராட்டுச் சொல்லிட
நினைவே வந்ததில்லை.
விதையா செடியா
வளர்ந்து நிற்குமென
வாசல் தாண்டி
எட்டியும் பார்த்ததில்லை.
முட்களின் அணிவகுப்பில்
இலைகள் ஒளிர்வதை
கண்ணுறும் வேளையில்
காயத்தை எண்ணித் தொடுவதுமில்லை.
ஆசையாய் வாசலில்
அரைவாளி நீரும்
செடியின் நிமிர்தலுக்கென
தெளித்ததுமில்லை.
வானக்குடைக்குள்
விரிந்திட்ட உயிரில்
அழகெனும் நினைப்பில்
மொட்டின் அவதரிப்பையும்
முன்நின்று ரசித்ததில்லை.
வண்ணங்கள் நீட்டி
வண்டுகளை இளைப்பாற்றி
சோலைக்கான பாதையிடும்
இதழ்களின் வடிவங்களையும்
நின்று காண்பதில்லை.

என்றேனும் ஒருநாள்
எட்டிப் பார்ப்பேனென
புன்னகை விரித்து
பூக்கிறது தினமும்.
என்னை உணராது
பிறந்திடும் கவிதைக்கு
உயிரூட்ட வருகிறது
மலரின் நறுமணம்.
தன்னையே பரப்பாக்கி
உலகினை வாசமாக்கும்
மலரின் பயணத்தில்
படித்திடக்கூடும் ஆயிரம் பாடங்கள்.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# காலக்கணிதம்

காலத்தின் கொடுமையாய்
*கங்குலியில்* நுழைந்து

*அழுக்காறு* எண்ணத்தால்
அகிலத்தில் படர்ந்து

தாம்தம் *நசையை*
நசங்காமல் அடைய

*மடியை* துறந்தாயே
*முந்நீரையாய்* சூழ்ந்தாயே

*முழுமக்களாய்* மதியிழந்து
*கூற்றமாய்* மாறினாயே

*கேளிர்* நெஞ்சத்தில்
*வேள்வியை* வளர்த்தாயே

*வைகலும்* கடந்தாலும்
வையகத்தில் வழியில்லையே

அனுதினம் *இடும்பைக்கு*
இடும்பையை புகுத்திட

அச்சத்தை தவித்தாயே
ரௌத்திரத்தை கொடுத்தாயே

வகையாய் சூடியே
*மாட்சிமையாய்* அடைந்தாயே

வருங்காலம் முழுவதும்
வறுமையை துறந்து

விடிவெள்ளியாய் மாறி
விடியலை தருவோமே

ஐந்திணை நிலத்திலும்
ஐயத்தை துறந்தோமே

பண்டைய பண்போடு
பாரதத்தைக் காத்தோமே

காவியத்தின் கணிதனாய்
கவியுலகை படித்தோமே

கலையின் சொற்களாய்
கலங்கரையில் நின்றோமே

இனியோர் மகனா(ளா)ய்
தமிழன்னையில் நிறைந்தோமே.

கவிஞர் ஏ. தேவராஜ்

# மைவிழி

காதலில் கட்டுண்டு மௌனமாய்
கவிதை பேசும் கண்கள்!
கருணையும், பரிவும்
வழிந்தோடும் கண்கள்!
பார்வையால் அள்ளி அணைத்து
இதம் தரும் தேவதை!
அநீதி கண்டு ரௌத்திரம்
பொங்கி எழ வெடித்துச்
சிதறும் எரிமலை அவள்!
தீயதைக் கண்டால் சுட்டும் விழி
பார்வை தனலாய் மாறி பொசுக்கும்
வித்தை அறிந்தவள்!
மைவிழியின் மையலில்
கரைந்து போவதும்,
வேல்விழியாளின் கோப பார்வையில் சாம்பலாய்
எரிந்து போவதும் ஆணவனின்
நடத்தையைப் பொறுத்தே அமையும்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# துரித கவிதை

நற்றுணை தேர்
நாவடங்கி இரு
நிசயமாய் பழகு
நீசம் தவிர்
நுண்ணியமாய் கல்
நூக்கம் போலுயர்
நெஞ்சத்து வஞ்சகம் தவிர்
நைசல் நீங்கி வாழ்
நொட்டை கூறேல்
நௌவியம் தவிர்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# தொடரும் பயணம்

பாசத்தை தேடி நானும்
    தேசங்கள் போனதில்லை.
பேசத்தான் ஆட்கள் வேண்டி
    பிறரை நாடியதில்லை.

வீசத்தான் வார்த்தையுண்டு
    வீம்புகள் செய்ததில்லை.
விஞ்சினால் அழுது கொள்வேன்
    கண்ணீரில் முத்து செய்வேன்.



மத்தலம் போலமனம் படுகின்ற
    பாட்டினிலே தாளங்கள்.
போட்டுக் கொள்வேன் காயங்கள்
    ஆற்றிக் கொள்வேன்.

ஆண்டவன் இருக்கின்றானே
    பாரத்தை போட்டுக் கொள்வேன்.
தூரத்தை நோக்கிச் செல்வேன்.
    தேடலை முடிக்க மாட்டேன்.

கவிஞர் கோ.தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# தென்றல்

தென்றல் காற்று மனதை வருடியது
தென்னையும் பாட்டு பாடி மகிழ்ந்தது
தெற்கே பறவைகள் வானில் பறந்தது
தெம்மாங்கு பாடலை உழவன் இரசித்தது
தென்கிழக்கு பருவக்காற்றும் சேதி சொல்லியது
தெற்கத்தி பெண்ணுக்கும் காதல் மலர்ந்தது
தெவிட்டா  இனிமையோடு மனம் குளிர்ந்தது
தெப்பகரை ஓரம் சில்லென சிலிர்த்தது
தெங்கையும் பார்த்து கதை பேசியது
தெள்ளாத மனமும் மயங்கி நின்றது
தெவிட்டா இனிமையை தந்துச் சென்றது




கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம், நாகர்கோவில்

# தலைக்கனம்

ஒப்பிட ஒருவன்றி உயர்ந்தவர் யாருமில்லை
வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டே
சுவாசம் நின்றால் நாற்றம் வீசும்
நாளைய தினம் பற்றி யாரறிவர்?

விந்தையான வாழ்க்கை வித்தியாசமான குணங்கள்
ஒருவருக்கும் மற்றவர் வாழ்வில்லை எனில்
தலைக்கனம் ஏன்? தற்பெருமையும் வீண்
வரட்டு கவுரவமெல்லாம் வேண்டாத குப்பை

வறுமை அகற்றி வாழ முயல்வோம்
மற்றவர் வயிறும் நிறைய தந்து மகிழ்வோம்
தலையில் கனம் ஏற்றி வாழ்ந்திடலாம் தவறில்லை
தலைக்குள் கனம் ஏற்றி நடப்பது தவறே

எல்லாம் தெரிந்தவர் எவருமில்லை
ஒன்றும் தெரியாதவர் ஒருவருமில்லை
முடிந்தவரை முயற்சி செய்வோம்
முடியாதபோது பயிற்சி செய்வோம்

இனி வரும் நாட்கள் இனிமையாக
தலைக்கனம் இன்றி தரணி ஆள்வோம்



கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# வாழ்க வாழ்க பிஸ்னாய் மக்கள்!

எத்தனையெத்தனை இனக்குழுக்களெந்தன் இந்திய தேசத்தில்;
எண்ணிப்பார்த்து சொல்லுதல் யாராலிங்கு இயலும்?
ஆரியம் திராவிடம் என்றவிரண்டே விரண்டுதான்
ஆன்றவெந்தன் தேசத்தின் இனங்களென நினைக்கலாமா?

வடநாட்டில் வாழ்ந்தது அன்றோர் வீரரினம்நம்
வாழ்வழிக்க வந்தவெள்ளையரை வேரறுத்த வீரரினம்;
இராஜபுதனத்தார் என்பது அவர்களின் திருப்பெயராம்;
இராஜஸ்தான் என்பது அவர்கள் வாழ்நிலமே!

இராஜஸ்தான் பகுதியில் வாழ்ந்தவொரு குழுவினர்
இயற்கையை நேசித்து வாழும் மரபினர்;
பிஸ்னாய் என்ற பெயர்தாங்கி பிறந்தமண்ணின்
பாலைத்தன்மை மாற்ற பாடுபட்டனர் சோர்வின்றி!

விலங்குகளையும் மரங்களையும் நேசித்த அம்மக்கள்
விலைமதிப்பற்ற தம்முயிரையும் மரமது காக்க
அர்ப்பணித்த தியாகத்தை என்னவென்று உரைப்பேன்!



அப்பகுதியை பண்டு ஆண்ட மகாராஜா
அபய்சிங் தனக்கொரு எழில்மாளிகை கட்ட
கேஜரி மரங்களை வெட்டச்சொல்ல வெட்டவிடாது
தடுத்தலின் முதன்மை பெற்று உயிர்தியாகம்
தந்தார் அம்ரிதாதேவி என்றவீரமிகு பெண்மணி;
அவள்பெண் பிள்ளைகளும் அவளைப் பின்பற்ற
ஆருயிரை அளித்தனர் முந்நூற்று அறுபத்துமூவர்
ஆடவர் பெண்டிரென ஒருவர்பின் ஒருவராக!

அயர்ந்த அரசன் மரம்வெட்டுவதை நிறுத்தி
அங்கினிமேல் யாரும்மரம் வெட்டாதபடி ஆணையிட்டார்!
பிறந்தமண் காக்க உயிர்தியாகம் செய்வதினினும்
பிழைசெய்யா மரம்காக்க செய்தவுயிர் தியாகமேயென்னைப்
பாடச்செய்தது பிஸ்னாய் மக்களின் புகழையே!
புகழ்ந்திடும் தியாகத்தையவர் செய்தாலும் அக்கொலையும்
பெயர்பெற்றது கேஜ்ஜரலி படுகொலையென்றே வரலாற்றில்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# எஜமானம்

திரைமறைவில்
எஜமான் சொன்னபடி
பொதுவெளியில் ஆடும்
அந்தரங்க ஏவலனை
வெட்டவெளியில்
எஜமானுக்கான
ஒப்பாரி விளம்பரத்தில்
ஒர் இலவசக்கோமாளியாய்
வெளிப்படையாய்
இறக்கிவிட்டால்
சந்தி சிரிக்கும் தானே
எஜமானம்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

ஒரு முதல் ஒத்திகை
இருக அணைத்து விட்டு
இளவலின் வார்த்தைகள்.

நெடுநாட்கள் கண்ட கனவு
பல கூடங்களில் பின் இருக்கை
எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஏக்கம் .

ஏர் பிடித்து கைகளும்
ஊரு சுற்றிய  கால்களும்
ஏடு பிடிக்குமா என்று ஏளனம்



உழுதல் நிலத்தின் பக்குவம்
விதை விதைத்த பிறகு
விளையும்போது தானே.

ஏதோ சிறு விதை தான்
உழுதிட்ட நிலத்தில் ஊன்றி விட்டேன்
ஒரு நாள் பெருமரமாகும் என்று.

கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

# தர்மம்

இல்லாதவர்களின் இயலாமை
சாலைகளில் தினந்தோறும்
கையேந்தும் அவலங்களாய்

பிச்சை பாத்திரம் ஏந்தி
நாள்தோறும் இவர்களின்
பாதயாத்திரை சாலைகளில்

மனம் முழுவதும் வேதனையின்
வெளிச்சம் ஆனாலும் குரல்களின்
கூக்குரல் தெருவோரத்தில்

இவர்களின் முகம் காண
மறுத்து வாகனத்தில் வசதியாய்
சமூகம்

மனிதனால் அருவெறுப்பாக
ஒதுக்கப்படும் கிழிந்து போன
அகராதி இவர்கள்

தர்மம் தேடும் இவர்களின்
கனவுகளை காயப்படுத்தாமல்

முடிந்தவரை கடந்து போய்
விடுங்கள் முகங்களே



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தனியறை

புத்தகங்களுக்குள் மூழ்கி திளைக்க
நிம்மதியாய் ஓர் சுவாசம் சுவாசிக்க
மனவேட்கை தனை வெளிகொணர
மௌனமாய் உறங்கும் திறமையை தட்டி எழுப்ப
சிந்தைதனை சீராக்க
கூச்சமின்றி கால் மேல் கால் போட்டு அமர
பிடித்ததை எழுத
நினைத்ததை உடுத்த
விருப்பமான பாடலை மெய்மறந்து
சத்தமாக பாடி ரசிக்க
பிடித்த பாடலுக்கு தானறிந்த நடனம் ஆடிட
விருப்பமில்லா நெருக்கம் தவிர்க்க
வேண்டாத விவாதம் விடுக்க
இறைநிலையின் யோகம் காண
வாய்விட்டு சிரித்து
மனம்விட்டு பேசி நட்போடு கதைக்க
துரோகத்தின் வடுக்களை
சற்று திரும்பி பார்த்திட
வலிகளின் எண்ணிக்கையின் வடிகாலாய்
சற்று உரக்க கதறிதீர்த்திட
தலையணை பூக்கள் மட்டும் அறிந்திடும்
கண்ணீர் துடைக்க
கடமைக்காக சுயம் தொலைத்த தன்னை தேட
விடியாத இரவுகளில் முடியாத கனவுகளில் பயணிக்க
சத்தமில்லா சங்கேத வார்த்தைகளில்
காதோடு காதலோடு கடக்க
எல்லா பெண்ணுக்கும் வேண்டுமாம்
ஓர் தனியறை.



கவிஞர் க.சூரியகலா, மதுரை

# ஆசிரியர்கள் ஒளி ஏற்றும் தீபங்கள்

உள்ளத்தின் இருளை நீக்க வந்த
ஆதவர்கள்.

கல்வி சாலையில்
அறிவூட்டிய
தீபங்கள்.



எதிர்பார்ப்பின்றி
மாணவனின்
எதிர்காலம்
தேடுபவர்கள்.

ஏணிப்படியாய் நின்று
ஏற்றி விடுபவர்கள்.

நேர்மையையும்
எளிமையையும்
ஊட்டிவிடும்
எழுத்தறிவுகள்.

இளமையில்
கல்வியை
இயைந்தே
வழங்கியோர்.

மாணாக்கனின்
வருங்காலத்தை
செம்மையாக்கும்
வித்தகர்கள்.
எந்நாளும்
கற்றுத்தரும்
கலங்கரை
விளக்கங்கள்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கசந்து போகிறது

மனதில் நின்றுக்கொண்டு கேட்கிறது
சந்தேகம் கேள்வியொன்று

என்ன மனது இவர்களுக்கென்று
தன் மனதில் இன்னார் இன்னார் என்று சொல்லி விட்டு
பரிசு பொருளும் படை விருந்தும் படைத்து விட்டு
நேரகாலமில்லா கதையெல்லாம் கதைத்து விட்டு
இலவச விருந்தென நவின தொலைப்பேசி
தொலைந்து போகவா! அழைக்கிறது

இருட்டறையில் குருட்டுத்தனமாய்
காணொளி அழைப்புகளில் என்னப்பேச்சோ
நீள்ந்து நீடித்து விட்டு சொல்கிறார்கள்

பின்னாலொன்றி வேறாளோடு காணுகையில்
எம் மனது பதறிட என்னாயிற்று
உன்காதலுக்கென்று கேட்டால்
இலகாக பதிலுரைக்கையில் அழுகிறது என் மனது



ஒத்து வரவில்லை விட்டு விட்டோம்
ஒத்து வரவில்லை பிரிந்து விட்டோமென்று
என்ன அனுமதியில் தான் உரிமைக்கொண்டு
கண்மண் மறந்து காதலென்ற/ நாமம் சூடிக்கொண்டு
கண்ட நேரத்திலும் கைப்பேசி சூடெழ பேசினார்கள்.

ஒன்று போக இன்னொன்று
என்று மறுமுறையாய்
புது தொடக்கத்தை எப்படிதான்
மனமேற்று கொள்கிறதோ
தெரியவில்லையே

கண்ணில் காணும்போதெல்லாம்
என் நெஞ்சில் தீமூட்டம்
என்ன பெண் இவளென்று
வெட்டி போட வேண்டும் போல
ஓர் ஆவசம் கணதி தாங்காமல்
கொலைவெறியோடு எழும்போதெல்லாம்
அமைதி கொள்

வாழ்க்கை: பாடம் புகட்டும்
ஓர்நாளென சொல்லுது என் மனது

நல்ல பெண்ணை ஏமாற்றிய ஆணும்
நல்ல ஆணை ஏமாற்றிய பெண்ணும்
நன்றாக வாழ்ந்து விடலாமென நினைத்தார்களோ
ஆரம்பம் ஆனந்தமாகவும் அட்டகாசமாகவும் இருக்கலாம்
பின்னாளில் ஒன்றானால் தோன்றும்
முன்னாளில் இளவரிசி தோற்றத்தை தந்த உறவை
உதரியதன் பிழையை அப்போதிருக்கவே இயலாதே
பிடியில் காலம் கடந்திருக்கும்
கை விட்ட உறவு ஆனந்தத்தை தொட்டிருக்கும்

கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# மரியாதை

கோபத்திற்கு
இருக்கும் மரியாதையை
யாரும் புன்னகைக்கு
கொடுப்பதில்லை!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# போதை என்னும் புதைக்குழி

மது என்னும் ஓர் அரக்கன்
முகமில்லா பேரரக்கன்
விருந்தினராக வந்திடுமே
விதியையே முடித்திடுமே
புதிதான குடிப்பழக்கம்
புதைகுழியில் தள்ளிடுமே
விருந்து கொண்டாட்டமென
விதவிதமான பெயர்களில்

கேளிக்கையாய் நுழைந்திடுமே
வாழ்வை கேள்விக்குறி ஆக்கிடுமே
அறிய பல சாதனைகள் புரிந்திட்ட மேதைகளும்
போதை என்னும் புதை குழியில் புதைந்திட்ட
வரலாறு புவியிலே பல நூறு
புதிய புதிய சாதனைகள்
பூமியிலே படைத்திடும்
சாதனைகளின் பிறப்பிடம்.
இளைஞர்கள் என்பதே
பெருமையின் சிறப்பிடம்
போதை என்னும் கொடும் பிடியில்
சிக்காத மனம் வேண்டும்.
சீரான நம் வாழ்விற்கு என்றும்
சிறப்பான இடம் உண்டு.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# பாவை பின் பாதை

சுரிகுழல் இடைதொட்டு
ஒண்சிலம்பு ஒலி கூட்டி
மேகலை நெகிழ யிவள்
பாதம் பற்றிக்கொண்டு
பாதை இவள்பின்

பாவை கண்டனன்
மொழியிழந்து
தோயும் நிறத்திலான்!



கவிஞர் ஜெயப்பிரபா

# தேடலின் ரீங்காரம்

நீண்ட கருமை நதியில்
முகம் பொத்தும் நிமிடங்கள்
மனம் பூவின் மடலாய்

குழலின் மென்மையும்
கூதலின் சுகமும்
நறுமணத் தென்றலின்
உரசலில்

காதலின் தேடலில்
கவிமுத்தமொன்று
காமமில்லாத அன்பில்

கரைதொடும் அலைகளின்
ஆழ்ந்த சங்கமத்தில்
இடைச்சொருகும் காற்றிலாடும்
உள்ளமும்

தொலையும் நொடியில்
தூங்காத இரவும்
உன் முக கண்டிடவே
பேராவல் நதிக்குள் பெரும்
தேடலாய்

தூரங்களை தள்ளி வைத்திட
தூண்டில் தேடுகிறேன் மலரே
தூரத் தேசத்திலே
துடிக்கும் மனதை அடக்கும் வித்தை



வார்த்தைக் கோர்க்கும்
இவ்வரிகளில் சமர்ப்பிக்கிறேன்
என்னவளே சேரும் நாள்
வரும் வரையில்

செங்காந்தல் மலரோடு
ஒரு உரையாடல்
தீண்டிடாமலே இந்த வெட்கம்
ஆழிச்சூழி போல்
அணைத்துவிடுகிறது

ஆணின் வெட்கமும் அழகுதானடி
அழகியே
தூண்டா மணி விளக்கின்
ஒளியின் சுவடாய்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# உன்னால் உனக்கு

தேசத்தின் நலனைப் பேணிக் காத்து
நேசத்தோடு உறவாடி மனதால் மகிழ்ந்திடு



பாசத்தை அளவாகப் பாரினில் பொழிந்து
மோசம் செய்யாமல் உலகில் பயணித்திடு

வாழும் நாட்களை முறையாகத் திட்டமிட்டு
வாகை சூடிடும் வேட்கை கொண்டிடு

உயர்ந்த நட்பை உயர்வாகப் போற்றி
களங்கம் அகற்றிக் கரிசனையாய்க் கடந்திடு

சுயநல எண்ணத்தைச் சிந்தையில் தகர்த்து
சுகபோக வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்திடு

ஏழைகளை அரவணைக்கும் இனிய மனங்கொண்டு
ஏற்றமுடன் வாழ்தலே இகத்தில் இன்பம்

வேண்டியன வெல்லாம் வேண்டுவதை விட
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து

உன்னை நீ அடையாளங் கண்டால்
உனக்கான இன்பம் உன்னிடமே உண்டு

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# என்னவன்

பிரியமானவனே
நீண்ட நாள் தேடலில்
எனக்குக் கிடைத்த பெருவரம் நீ.

உன் வரவை எதிர்பார்த்துக்
காத்திருக்கும் நிமிடங்கள் கூட
ஒரு சுகமே.

உயிருக்குள் உன்னை
ஒரு அழகிய புதையலாய்
ஒளித்து வைத்திருக்கிறேன்

எனக்குள் மட்டுமா
எல்லோருக்குள்ளும் இருக்கிறது
ஏதோ ஒரு தீராத தேடல்

பூவின் வாசமாய்
உன் நினைவுகளில்
தங்கியிருக்கிறது என் சுவாசம்.

உன்னைக் கண்ட
நாள் முதலாய்..கற்பனையுலகும்
பிடித்துப்போனது.

என் கவிதைக் கிறுக்கல்களில்
நீ மட்டும் தானே
சுற்றிச் சுற்றி வருகிறாய்.

வானவில்லில் கூட நான்
காணாத அழகிய நிறங்களை
கலர்க் கனாக்களாய் தினம்
உன்னில் காண்கிறேன்



வானவில் நீயானால்
அதில் இருக்கும் ஏழு நிறமாய்
நான் இருப்பேன்.
அன்றிலாய் இணை பிரியாமல்
உனை தாங்கிடுவேன்.

வாழ்நாள் முழுதும்
பாசமலராய் என் நேச வானில்
உலாவரும் நிலாவாய்!

பயணிப்போம்
களைப்பாகும் வரை நாமிருவரும்
கைகோர்த்துக் காதல் தேசத்தில்.

கவிதையெழுத சிந்தித்தால்
சிந்தைக்குள் நீ வந்துவிடுகிறாய்
வரிகளெல்லாம் நீயாக.

ஏதேதோ எழுத நினைத்து
எழுதி முடிக்கிறேன்
உன் பெயரைக் கவிதையாக!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ்

## பாவகை: குறளடி வஞ்சிப்பா

மருத்துவமனை நுழைவாயிலில்
நெருப்பலைகளாய் சிலவினாடிகள்
சிலைவடிவென உன்முகமடி
தொலைதூரமாய் உன்நினைவுகள்
அந்தநொடியில் ஆராய்கிறேன்
விந்தையுலகின் என்னியதமே..!
என்னுலகம்
என்றன் காதலின் இதயம்
இன்று காண்கிறேன்  இனிமையின் பொழுதிலே.




கவிஞர் ஈ. தவணீதன், பல்லடம்

# புதையல்

புதையலைத் தேடி
நீண்ட பயணம்
காடுமலை
கடல்
கடந்த பின்
அனுபவங்களின்
ஆரத்தழுவல்கள்
ஆங்காங்கே
விழுந்த காயங்கள்
நெடிதாக இல்லாவிட்டாலும்
ஏதோ ஒரு
பாலைவனம்
பதம் பார்த்த
பாதங்கள்
அத்தனையும்
கைநீட்டி நிற்கும்
தொடங்கிய இடத்தில்
மறந்த
புதையலை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# பௌர்ணமியழகாய்



பகலவன் பூத்திருக்க
பாதிவானம் திறந்திருக்க

பிரிந்திடும் இருளும் பாதியிருக்க
பீள் சிறிதாய் துளிர்த்திருக்க

புதுவிடியலும் புன்னகைக்க
பூக்கள் பூத்து குலுங்கியிருக்க

பெருவாரியான நறுமணமிக்க
பேரிசையாய் தென்றல் அசைக்க

பொன்னான வண்ணங்களிருக்க
போதாதே விழியிரண்டும் பார்த்திருக்க

பௌர்ணமியழகாய் ஜொலித்திருக்குமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# பிரளயம் நிகழட்டும்

போர்வாட்கள் இறங்கட்டும்
பெருந்தாகம் அடங்கட்டும்

தீயுஷ்ணம் குறையட்டும்
தீராமழை பொழியட்டும்

ஆன்மக்கடல் நிறையட்டும்
ஆருயிர் துளிர்க்கட்டும்

காலக்கடன் தீரட்டும்
காரிருள் அகலட்டும்



கேவல்கள் அடங்கட்டும்
கொடுந்துயரம் விலகட்டும்

வெறுமை அழியட்டும்
விகல்பம் வெளுக்கட்டும்

பெருஞ்சுவர் இடியட்டும்
பிரளயம் நிகழட்டும்

இரகசியங்கள் அவிழட்டும்
இதயங்கள் கொண்டாடட்டும்

அன்பே! பேசிவிடு!

கவிஞர் மரூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்



பிறக்கும்போதே அனைவரும் இருப்பதில்லை அறிவாளியாய்
திறமையாளராய் , அறிவற்றவராய்!
வளரும் சூழ்நிலையும், இருக்கும் இருப்பிடமும்
காரணமென சொல்ல முடியாதே.
எண்ணங்களே வண்ணங்களாகவும் மாறும் வாய்ப்புளதே .

எண்ணற்ற விஞ்ஞானிகளில் முக்கியமானவர்
தாமஸ் ஆல்வா எடிசன் ஆவார்.
நான்கு வயதில் காது சரியே கேட்காதாம்
எட்டு வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டாராம்.
மூளை வளர்ச்சி குறைபாடும் அவரிடம் இருந்ததாம்.

பாடமினி சொல்லித்தர முடியாதென ஆசிரியர் சொன்னதாலே
அன்னைக்கு எழுதினாராம் கடிதமொன்று
அன்னையிடம் கடிதத்தை கொடுத்தபோது
என்ன எழுதினாய் என ஆசிரியர் கேட்க,
"உன்னைப் போன்ற அறிவாளிகளுக்கு
என்னை போன்ற ஆசிரியரால் பாடம் சொல்லித் தர முடியாது' என்று
அன்னைக்கு எழுதிய கடிதமதில் மாற்றி எழுதியதாய் சொன்னாராம்.
மனம் தளரா அன்னையுமே தன் மகனை தாரணி புகழ கொண்டுவர
பனிரெண்டு வயதில் நூலகம் அழைத்துச் சென்று பாடங்களை கற்பித்தாராம்.

எடிசன் முதலில் தந்தி கருவி கண்டுபிடித்தார்
பிறகு கிராமபோன் டெலஸ்கோப்பென பல கண்டுபிடிப்புகள்.
இன்று மின்னொளியில் பயணிக்கிறோமே அதை மட்டும் 5000 முறை
கண்டுடிடவே தோல்வியிலே முடிந்ததுவாம்.
டங்ஸ்டன் இழையோடு கண்டுணர்ந்த மின்விளக்கு அழகாய் எரிந்தது.

அன்னை இறந்த பின்னே ஆசிரியர் எழுதிய கடிதமதை
அவர் படிக்க முடிந்ததுவாம்.
எடிசன் மறைந்தாலும் அவரின் கண்டுபிடிப்புகள்
உலகம் உள்ளவரை அவரின் பெயரை மட்டும்
உச்சரித்துக்கொண்டே இருக்குமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

## ஆண்டாள் 024

### நாச்சியார் 08வது திருமொழி (மேகவிடுதூது 110 1-5)

காளிதாச ஸமஸ்கிருத மேகசந்தே சமொன்றுண்டே!
கோதையாம் ஆண்டாளும் பெருமானுக்கு மேகத்தை
தூதுவிட்டாள் தீந்தமிழில்! நாயகனை நண்ணுதற்கு
நாயகியோ தன்விழைவை காதல்மயக்கில் கழறுகிறாள்!
பித்தமது தெளிதற்கு உபாயம்பல தேர்கின்றாள்!
வான்மேகம் எம்பெருமான் போன்றதோற்றம் கானல்நீர்
அன்னதுவாய் கொண்டனளே! விண்ணில்நகர் திறனதற்கு
உள்ளதனால் தூதுவிடத் தேர்ந்தனளே! அநுமனது
தூதேபோல் அமையுமென எண்ணினளே! பிராட்டிபூமி
அவதாரம் அன்னவளே! பெண்மைதனை உருவழிப்பது
பெருமானுக்கு பெருமையன்று என்கின்றாள்! அவன்சேர்க்கை
கிட்டாதே சோககண்ணீர் தன்கொங்கை குவட்டினிலே
தன்சோர்வை உணர்த்திடுமே! தென்றலதே பொல்புயலாய்
நலிவுறுத்தும் வேளையிலே மேகத்தில் ஆறுதல்சொல்
அனுப்பினனோ! எல்லாமும் இழந்தபின் அவன்நாமம்
பாடிவாழ்ந்திடல் இயலுவதோ? என்மெலிவும் வளைகழல்வும்
அறியானோ எம்பெருமான்? தன்சார்பாக பிரிவுத்துயர்
சோகத்தை விருப்பத்தை பெருமானிடம் மேகங்காள்
உணர்த்துவீரே! அவனைப் அவனணைப்பே வேண்டுவது
என்றுரைப்பீர்! அடியார்களின் விரோதிகளை வேரறுத்து
என்னார்வம் நிறைவேற்ற என்றனது தொன்மையெழில்
மீண்டமைய அணிபலவும் தக்கபடி பொருளாதா
பொருந்துமாறு செய்விக்க எம்பெருமான் அன்னவற்கே
உணர்த்திடவே வேண்டுகிறாள்! அவன்சேர்க்கை இலாமையால்
பிரிவுத்துயர் மெலிவினையே சேர்த்ததுவே! முந்தைநிலை
யான்பெறவே எம்பெருமான் அருள்புரிய என்வேண்டுதல்
மஞ்க மேகங்காள் சேர்த்திடுவீர்! பாசுரங்கள்
ஐந்துணர்த்தல் ஈண்டறிந்தோம்! மற்றைந்து தொடர்ந்திடுமே!
கோதைதமிழ் நேர்சுவைத்து நாச்சியார்தம் திருமொழிகள்
ஆழ்ந்துணர்ந்து மாமகிழ்வு துய்ப்போமே! சூடிகொடுத்தவள்
பாடிகொடுத்தது மாலருளை சேர்த்திடுமே! துதிப்போமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# இல்லற வாழ்வினிலே

அன்பே! ஆருயிரே! எந்தன் துணையே!
எங்கெங்கோ பிறந்தோம் ! இணைந்தோம் இல்லறத்தில்!
பெற்றோர்கள் பார்த்து செய்துவைத்த திருமணம்தான்!
இற்றைக்கும் இல்வாழ்வில் இன்புற்று வாழ்கின்றோம்!
கரம்பற்றி நடக்கையிலே பெருமிதம்தான் இருவருக்கும்!
இன்ப துன்பங்களை இணைந்தே எதிர்கொண்டோம்!
ஆண்டுபல கடந்தாலும் அகமகிழ்வில் குறைவில்லை!
நன்மக்கட்பேறு நமக்கு வாய்த்ததுவே! வளர்த்தோம்!
நம்பேர் சொல்கின்ற பிள்ளைகளாய்த் திகழ்கின்றார்!
போதை, சூதாட்டம், பொல்லாத பழக்கங்கள்
ஏதுமின்றி வாழ்ந்ததனால் குன்றாத இளமையுடன்
கோதிலா வாழ்வு கைகூடப் பெற்றோமே!
துரித வாழ்வினிலே துணையைத் தேர்ந்தெடுத்து
புரிதலின்றி வாழ்கின்றார்! குறுகிய காலத்தில்
பிரிகின்றார் இந்நாளில்! இதுவா இல்வாழ்வு?
கடலும் அலையுமாய், வானும் நிலவுமாய்
உடலும் உயிருமாய், கண்ணும் இமையுமாய்
அடைக்கும் தாழில்லா அன்பினைப் பரிமாறி
கடைசிவரை இணைந்து இருப்பதே இல்வாழ்வு!
கடந்த காலங்களின் அனுபவங்களை அசைபோட்டு
நடைப்பயிற்சி செய்கின்றோம்! உடல்நலனைக் காக்கின்றோம்!
இணைய உலகிதுவாம்! இணைந்திருக்க மனமின்றி
கணையென குற்றமழை பொழிகின்றார்! பிரிகின்றார்!
என்னருமை இளைஞர்களே! இந்நிலையைத் தவிர்த்திடுங்கள்!
அன்னை தந்தையின் அறிவுரையை ஏற்றிடுங்கள்!
நானா? நீயா ? எனும் மோதல் இல்லாமல்
நாமென ஒன்றாகி விட்டுக் கொடுத்திடுங்கள்!
எங்களின் கருத்துக்கும் மதிப்பளித்து ஏற்றிடுங்கள்!
கன்னலாய் இனித்திடுமே இல்வாழ்வு எந்நாளும்!



கவிஞர் ஈ.சீ. சேஷாத்ரி

# வசந்தம் பூக்கட்டும்

திங்களாகிய முழுமதியின்
வதனத்துடன் வளைய வர

செவ்விதழில் வந்திடும் தமிழோ
செவ்வாயாய் இனித்திட

பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்ற
பெருமையுடன் குதூகலிக்க

குருவின் அருள் பெற்ற வியாழனாய்
பெரும் பேறு பெற்றிட

மகாலட்சுமியின் மறு தோற்றமான
வெள்ளியுடன் மகிழ்வும் வந்திட

சனி பகவான் அவரவர் பலனுக்கு தந்திடும்
நன்மை தீமையைப் பெற்று



பனியைத் துடைத்தெறியும் ஞாயிறாய்
உறுதியுடன் நின்றிட

ஒவ்வொருவர் வாழ்விலும்
வசந்தம் பூக்கட்டும்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# காத்திருக்கும் கனவுகள்

எண்ணங்கள் பலகோடி எங்கெங்கோ ஓடிடுதே
வண்ணங்கள் தேடித்தான் வாழ்வதுவும் அலைகிறதே
மண்மீதில் கனவுகளோ மனக்கோட்டைக் கட்டிடுதே
கண்மூடி அசைபோட்டு கடலளவு விரிந்திடுதே

ஓயாமல் சிந்தனையில் உயிர்த்தெழுந்தே வாழ்ந்திடுதே
காயங்கள் பலகண்டும் கடந்திடாமல் நிற்கிறதே
சாயங்கள் பூசாமல் சரிவுகண்டு அஞ்சாமல்
தேயாத கனவுகளே திசையெங்கும் நடந்திடுமே

காத்திருக்கும் கனவுகளும் கைவசமாய் சேர்ந்திடுமே
பூத்திருக்கும் முயற்சிதனில் புத்தாக்கம் பெற்றிடுமே
தோத்திரமாய் உழைப்பதனை தொய்வின்றி கொடுக்கையிலே
பாத்திரமாய் வெற்றிகளும் பணியுமுந்தன் முன்நின்றே

என்னாலே முடியுமென்ற எண்ணத்தை விதைத்திட்டால்
தன்னாலே காரியங்கள் தடைத்தாண்டி சென்றிடுமே
முன்னெடுக்கும் செயல்மீது முழுகவனம் வைத்திட்டால்
பின்னாலே ஒருபோதும் பிழையாகி நிற்காதே

நம்பிக்கை மந்திரத்தை நாளும்நீ ஓதிவிடு
வம்புசெய்யும் இடர்களதும் வழிவிட்டே ஒதுங்கிடுமே
பம்பரமாய் இலக்கைநோக்கி பாய்ந்தோட வேண்டுமிங்கே
அம்பிகையே அருள்புரிவாள் அயராத உழைப்பிற்கே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# நிலை மாறிய தருணம்



வாழ்க்கை ஒரு கை கோப்பை
அதில் ஒளிந்திருக்கும் மர்மங்கள் ஆயிரம்.
வலிகளுடன் பயணிக்கும் மனித மனம்.
பல மாயங்களுடன் மர்ம பின்னணியில்
தன் தேவை எது என்று அறியாமல் சிலர்.
நடைவண்டி போல் நாட்டில்
பயணம் இல்லாமல்.
பாகுபட்ட சமூக சித்தாந்த சீர்கேடுகள்.
எண்ண முடியாத அளவிற்கு வலிகள்.
அதை எண்ணி எண்ணி ஏங்கும் மக்கள்.
ஆயிரம் ஏடுகள் எடுத்து உரைத்தாலும்.
கவனம் கொள்ளாத அறம்
கெட்ட அரசாங்கம்.
இதில் செழித்து வாழும் அரசியல்வாதிகள்.
பல்லாயிரம் குற்றம் வைத்தாலும்
குழப்பமில்லாமலே.
வெற்றி வாகை சூடும்
வேடிக்கையாளர்களே நாட்டில்.
மாபெரும் வெற்றியாளர்
கடை கோடி மக்கள் கண்ணீருக்கு வழி இல்லை.
அறம் கெட்ட மனிதர்களே இவ்வுலகில் மாமனிதர்கள்.
போராடி போராடி ஏழையே இறக்கிறான் நீதி இன்றி.
நீதி இழந்த ஒவ்வொரு நாட்டிலும் நிலை மாறும்.
ஒவ்வொரு நாளும் அதன் பின்னணியிலே பலரின் வாழ்க்கை.
வெந்து தணிக்கிறது ஏழைகளின் மனம்.
பல ஏடுகள் எடுத்துரைத்தும்.
இரக்கமில்லாமல் இவ்வுலகில்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

கையில் உரம் இருந்தால்
மரம் வளர்க்கலாம்
நெஞ்சில் உரம் இருந்தால்
மரம் வெட்டலாம்
***

காரணப்பெயர் அவளுக்கு
நிலா
அப்படியே இருப்பாள்
***

ஊருக்கு ஒதுக்குப் புறமாக
இன்னொரு ஊர் வந்துவிட்டது
இப்போதெங்கே ஒதுக்கி வைப்பீர்
சாதிகள் கூறி
***



வளைவுகளில் முந்தாதீர்
இவ்வகை
இரத்தம் கெஞ்சாதீர்.
***

சாய்ந்த மரத்தில் துளிர்க்கும் இலை
வெற்றிலை
(வெற்றி இலை) எனப்படும்
***

காணக்கிடைக்காத பொக்கிஷம்
மனம்
கண்டாலும் பொக்கிஷமே
***

சொல் பேச்சு
கேட்கும்!
பார்வையற்றோர்
***

இயற்கை அன்னை உனக்களிக்கும்
ஒரே கேள்வி
பதில் கூற இயலாத கேள்வி
எரிப்பதா? புதைப்பதா?
***

நீ வெட்டிய மரம் கூட
விறகாகலாம்
உனக்கு

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

இன்று தான் இந்த புத்தகத்தை படித்தேன்.ஒரு அரை மணி நேரத்திற்குள் படித்து முடித்து விட்டேன். மிகவும் குறைவான பக்கங்களை உள்ளடக்கிய புத்தகம் ஆனால் அந்த புத்தகத்தின் உள்ள விடயங்களை பார்க்க நேரிடும் போது எனக்குள் மிகப்பெரும் வியப்பை ஏற்படுத்தியது.



அது என்னவென்றால் புத்தகம் ஒரு மனிதனை மாற்றும் சக்தி படைத்தது. அந்த வகையில் அன்பை அடிப்படையாகக் கொண்ட அன்பு மொழி புத்தகம் ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கையையும் அதற்கான சவால்களை மேற்கொள்ளும் ஒரு நல்ல பாதையை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது.

இவர் கொடுத்திருக்கும் ஒவ்வொரு கவிதைகளிலும் அன்பின் விதைகள் அளவில்லாமல் விதைத்திருக்கிறார். அன்பை நம்பிக்கையாகவும், ஒரு இடத்தில் அன்பை அகிம்சையாகவும், அன்பை ஒரு மிகப்பெரிய ஆயுதமாய் எடுத்துக் கொள்ளவும், முடியும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும், நிம்மதிக்கும், வெற்றிக்கும் அடிப்படையாகவும் அன்பு தான் இருக்கிறது.

அன்பை ஒரு குழந்தையாக பாவித்து குழந்தை இருக்கும் இடம் எப்படி இருக்குமோ அதுபோல் அன்பு இருக்கும் இடம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை மிகவும் அழகாக வலியுறுத்தி இருக்கிறார். அது மட்டும் இல்லாமல் விதைகள் ,முயற்சிகள், நம்பிக்கைகள் என்றும் ஒருபோதும் உறங்குவதில்லை அவைகள் உறங்கினால் உலகம் என்றும் சுழலாது என்பதையும் மிக ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

எழுத்தாளர் சிவக்கனி, உடுமலைப்பேட்டை.

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

விலைமதிப்பற்ற ஒரு பொக்கிஷம் தான் அன்பு. ஆதிக்கமற்ற அன்பு ஒரு புயல் அடிக்கும் மனதையும் புன்னகைக்க செய்யும் என்ற ஒரு வரிகள் அன்பை அழகாக அளந்திருக்கிறார். அது மட்டும் இல்லாமல் ஒரு தரிசு நிலத்தோடு ஒப்பிட்டு அன்பை அழகாக விளக்கி இருக்கிறார்.

அன்பு ஒரு எதிர்மறையான எண்ணம் உடையவர்களையும் மாற்றும் எல்லையற்ற ஒரு பேரன்பின் இருப்பிடமாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறார். விட்டுக்கொடுத்தல் என்பது ஒரு மிகப்பெரிய பெரும் தவம் அதை அன்பால் அரவணைக்கலாம் என்பதையும் சொல்லி , அன்பு ஒரு வற்றாத நீரூற்று அதை ஒவ்வொரு நாளும் பருக வேண்டும்.

அன்பும் நம்பிக்கையும் இரு கண்கள் அவற்றை பத்திரமாக பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். அன்பு ஒரு மந்திரக்கோல் என்றும் அதை அடர் வனத்தோடு ஒப்பிட்டு பசுமை என்றும் கனிகளை தருவதைப் போல அன்பு அனைவருக்கும் வற்றாத அன்பை வாரி வழங்கும்.

இந்த புத்தகம் மிகவும் வழிகாட்டுதலாக உள்ளது.

பகுத்தறிவு மட்டுமின்றி பண்பை கற்றுத் தருவதும் அன்பின் கடமை என்பதை மிகவும் அழகாக வலியுறுத்தி இருக்கிறார். அன்பின் வேர் அனைத்திற்கும் ஆதாரமாய் இருக்கிறது.

இது ஒரு காலத்தின் அருமருந்து என்றும் அன்பே ஆறுதலாய் இருந்து அனைத்தையும் ஆற்றுப்படுத்தும் என்றும் சொல்லியிருக்கிறார்.

கல்வி ,பகுத்தறிவு, ஒழுக்கம் ,நேசம் இதை நான்கும் ஒரு தேரின் சக்கரங்களை போல இயக்க வேண்டும் இதற்கும் அன்பே அடிப்படையாக இருக்கிறது.

எழுத்தாளர் சிவக்கனி, உடுமலைப்பேட்டை.

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

உயிருக்குள் கலந்து விட்ட உணர்வால் அன்பு இன்னும் உயிர் பெறுகிறது.
மூன்றெழுத்து ஒற்றைச் சொல் ஓராயிரம் மனிதர்களுக்கு வழிகாட்டியாய் இருக்கிறது.

இந்த அன்பு என்ற வெல்ல முடியாத ஒற்றைச் சொல்லை சுமந்து செல்ல விரும்புவோர் வேறு எதையும் தேர்ந்தெடுக்க மாட்டார்.
இதை யாரும் சுமையற்ற செயல் என்று எண்ண மாட்டார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் அன்பை ஏற்று அன்பால் அனைவரையும் அரவணைப்போம். அன்பை விதைப்போம்.அது மிகப்பெரும் விருட்சமாக வளரும்.

இந்த புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய புத்தகம். ஒவ்வொருவரும் இதை வாங்கி படியுங்கள். இதை வாங்கி பரிசளியுங்கள்.




எழுத்தாளர் சிவக்கனி, உடுமலைப்பேட்டை

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

நூல் ஆசிரியர்: இரஜகை நிலவன்

யமுனை ஆற்றின் கரையோரத்தில்தானே அன்றைய மொகலாய மன்னன் ஷாஜஹான் மன்னன் தன் மனைவி மும்தாஜ் அவர்களுக்கு தாஜ்மஹால் என்னும் அழகிய பளிங்கு கட்டடத்தைக் கட்டினான் என்ற வரலாற்றை படித்துள்ளோம். ஆனால் இந்த நூலின் ஆசிரியர் கவிமாமணி இரஜகை நிலவன் அவர்கள் காவேரியோரம் ஷாஜஹானும் தாஜ்மஹாலும் என்று இந்த நூலுக்கு தலைப்பை வைத்துள்ளாரே? எதனால் அவர் இத்தகையதோர் தலைப்பை வைத்தார் என்று அவரின் கவிதைகளின் தோப்புக்குள் ஒரு வலம் வந்து அங்கு கண்டதை, தெரிந்ததை இதோ இங்கே விமர்சித்திருக்கிறோம்.

கடிவாளத்தை
துணிவாகத்
தளர்த்திய
சங்கீதசிற்பி..!

மாற்றங்களை
எதிர்கொள்ளச்
சொல்லித் தந்த
நல்லாசிரியன்..!

என்று முதல் கவிதையை தன்னுடைய அப்பாவுக்குத் தந்து நூலை தொடக்கம் செய்திருக்கிறார் இந்த நூலாசிரியர். இது நன்றாக இருக்கிறது.

உழைக்க கத்துக்கிட்டா
பூமித்தாயும் சோறுபோடும்
கிராமத்திலே வாழும்
வாழ்க்கை சொர்க்கமடா..!

"ஓலைக் குடிசை தாண்டா ஒரு முழப் பாய்தாண்டா" என்ற கவிதையில் மிகவும் தெளிவாக மேலே உள்ள வரிகளில் எதார்த்த உலக வாழ்க்கையை அப்படியே எடுத்தியம்புகிறார்.

மனிதநேயம் சிறக்க
கைகளை இணைத்திடு
வேற்றுமையில் ஒற்றுமைகாண
நாளும் திட்டமிடு..!

மனமே நீ அடங்கு! அடக்கம் தேடு! அப்படித் தேடினால் மனித நேயம் சிறக்கும், அப்போது ஒற்றுமையை முன்னெடுக்க கைகளை இணைத்திடு என்று வேற்றுமையிலும் ஒற்றுமைகாணும் வித்தையை உலகுக்குச் சொல்கிறார்.

இப்படியாக இந்த நூலில் கிட்டத்தட்ட என்பத்தைந்து கவிதைகளை தொகுத்து ஒரு முழு நூலாக படைத்திருக்கிறார் நூலாசிரியர். ஒவ்வொரு கவிதையும் மிகச்சிறந்த வரிகள் வேண்டும் என்பதற்காக அதிகம் மெனக்கெடாமல், தன் உள்ளத்திலும் சிந்தையிலும் எழுந்து வந்துதித்த சொற்களை அப்படியே கோர்த்து எடுத்தியம்பியிருப்பதுதான் இந்த நூலின் தனித்தன்மையாக விளங்குகிறது.

இன்றைய காலகட்டத்திற்கு தேவையான அனைத்து தன்னம்பிக்கைகளையும், வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து கையாளும் திறமைகளையும் ஒருசேர இந்த நூலில் காணலாம். ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வை சரியான வாழ்க்கையாக வாழவேண்டும் என்று எண்ணினால் அவனுக்குத் தேவையான அத்தனையும் இந்த நூலின் வழியே படித்து, பகுத்தறிந்து தெளியும் வகையில் இந்த நூலில் கவிதைகளின் வழியே தெறியப் படுத்தியிருக்கிறார்.

# மகள் வரைந்த கோடுகள்

## நூல் அனுபவம் — கவிதை நூல்

**ஆசிரியர்: மகேந்திரபாபு**
**வெளியீடு : அன்புநிலா**




இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகான தனது இரண்டாவது நூலை ஹைக்கூ நூலாக வெளியிட்டிருக்கிறார். தொடர்ந்து பல்வேறு இணைய இதழ் மற்றும் அச்சு இதழ்களில் வெளிவரும் இவரது படைப்புகள் கவனம் பெற்றுவருகின்றன. குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு பாடல்களென தொடர்ந்து எழுதி வருகிறார்.

செருப்பைக் கழட்டிவிட்டு
இறங்கி நடந்தார் அப்பா
திருத்தலமானது வயல்

சம்சாரிகள் செருப்புபோட்டு வயல்களில் நடந்து போகமாட்டார்கள். தங்கள் வயல்களைக் கோவிலெனக் கும்பிட்டு மண்ணை அள்ளிப்பூசி வழிபடும் சம்சாரிகள் எவ்வளவு நுண்ணறிவுமிக்கவர்கள். என் சிறுவயதில் நாற்றங்காலைச்சுற்றி வரப்பு வெட்டும்போது அப்பா சொல்வார் சாமிசுத்திவரும் நல்லா அப்பு வரப்பு போடுப்பா என்பார். வயலோடும் வரப்போடும் கிடந்ததால் இந்த கவிதை மனதை இறுக்கிப்பிடிக்கிறது.

பாகப்பிரிவினை இல்லை
தொடரும் கூட்டுக்குடும்பம்
ஒரே மரத்தில் பறவைகள்

சமகாலத்தில் கூட்டுக்குடும்பம் என்பதே அரிது. பாகப்பிரிவினை இல்லாத உண்மையானக் கூட்டுக்குடும்பம் என்றால் அது பறவைகள் மட்டுமே. கூட்டுக்குடும்பத்தை பறவைகளோடு ஒப்பிட்டு எவ்வளவு அருமையாக காட்சிப்படுத்தியிருக்கிறார் கவிஞர்.

கைநிறைய பணமிருந்தும்
தாகத்தோடு ஏங்கும் மனம்
தட்டுப்பாட்டில் குடிநீர்

பெரும் வசதிவாய்ப்பு இருந்தாலும் தண்ணீரின்றி உயிர்வாழமுடியாது. முப்பாட்டன் வள்ளுவன் நீரின்றி அமையாது உலகு என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறான். கடந்த சிலதினங்களுக்குமுன் எலக்ட்ரானிக்மெட்ரோசிட்டி என்று சொல்லக்கூடிய பெங்களூர் பெருநகரத்தில் தண்ணீர்தட்டுப்பாட்டில் அலைக்கழிந்ததை நாம் அனைவரும் பார்த்திருப்போம்.

வறண்டு கிடந்தநதி
தின்று செரிக்கிறது
மதியவெயிலை

வறண்டு சுனங்கிக்கிடக்கும் நதிகள் வெயிலைத் தானதின்று செரிக்கமுடியும் என்பதை அழகாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

சுமை தூக்கிச்செல்லும்
வண்ணத்துப்பூச்சிகள்
பள்ளிக் குழந்தைகள்

நாம் காணும் அற்புதமான காட்சியை கவிதையில் வடித்தெடுத்திருக்கிறார்.

வயலில் அம்மா
கனக்கிறது நெஞ்சு
மரக்கிளைத் தொட்டிலில் குழந்தை

நடுகை, களையெடுப்பு, கதிர்அறுப்பு போன்ற எல்லா காலங்களிலும் வயலோரங்களில் இருக்கும் மரங்களில் தொட்டில் கட்டி போட்டுவிட்டு வேலைசெய்யும் அம்மாக்களுக்கு தாயாகிறது மரங்கள்.

காலாண்டு விடுமுறை
வயலில் களையெடுத்த நினைவுகள்
இன்று கட்டடக்கலை

என்னைப் போன்ற கிராமத்துவாசிகளுக்கு. எங்க ஊரில் கருப்பிக்கெழவி என்ற ஒரு கெழவி இருந்தாள். அவளது வயலுக்கும் கருப்பிக்கெழவி வயல் என்று ஏழுதலைமுறைகளாக சொல்லிவந்தோம். நாற்றுப்பாவ நாற்றங்கால் தயார் செய்தால் போதும் கண்மாயில் இருக்கும் பாதிப் பறவைகள் அந்த வயலில்தான் கெடக்கும். இன்று அடுக்குமாடிகளாக கட்டிடங்களாக உயர்ந்து போய் நிற்பதைப்பாரத்தால் உள்ளம் கனக்கிறது.

கவனிப்பாரின்றி
காவல் தெய்வங்கள்
வீட்டில் முதியோர்கள்

முதியோர்களை சுமையாக கருதி இச்சமூகம் தனித்துவிடப்படுகின்றன. தங்களுடைய இறுதிக்காலத்தையும் நரகமென கழித்து வீட்டின் காவல் தெய்வங்களாகவே இருக்கிறார்கள். உடம்பு சுருக்கம் பட்டபோதிலும் மோதிரத்தையும் தண்டட்டியையும் விற்று கிணறு தோண்டி விவசாயம் செய்து தலைமுறைகள் காத்துவந்த கிழவனும் கிழவியையும் முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு பிணமாக வீட்டுக்குத் தூக்கி வரும் சம்பவங்கள் மனதை நெருடத்தான் செய்கின்றன.

இதைப்போன்ற ஏராளமான கவிதைகள் சமூகப்பார்வையோடும், இந்த பிரபஞ்சத்தில் ஹைக்கூ என்றால் என்ன என எள்ளி நகையாடும் நவீன உலகிற்கு மகேந்திரபாபுவின் ஹைக்கூ கவிதைகள் மேலும் வலுச்சேர்க்கின்றன.

# திரு. தங்கமணி

## கட்டுரை

திரு.தங்கமணி அவர்கள் 1925ஆம் ஆண்டில் பிறந்தவர். தந்தை பெயர் திரு.மு.தங்கவேலர். தாயார் பெயர் தருமதி.சூடாமணி அம்மாள். தங்கமணி எட்டாம் வகுப்பு வரை படித்தவர். சென்னைத் துறைமுகம் பகுதியில் கரியமால் நகரில் வாழ்ந்தவர்.



இவர் 1947 முதல் 1954 வரை வெளியான அனைத்து சிறார் இதழ்களிலும் தனது படைப்புகளை எழுதி வந்த பெருமை உடையவர். இவர் எழுதிய முதல் சிறார் இலக்கிய நூல் 1949ஆம் ஆண்டில் "சுருமார்" என்ற தலைப்பில் வெளியானது. இவர் எழுதிய "புயலும் விளக்கும்", "பொம்மி", "மீனா", "ஒரு பூ மலர்கிறது" போன்ற நூல்கள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றவை.

சிறார்களுக்காக இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய பெருமை உடையவர் திரு.தங்கமணி. சிறார்களுக்காக அதிகமான சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. இவருடைய சிறுகதைத் தொகுப்புகள் "மணிக்கதைகள்" என்ற தலைப்பில் நான்கு தொகுதிகள் வெளியாகியுள்ளன. "அறிவு வளர்ச்சிக் கதைகள்" என்ற தலைப்பில் ஒரு சிறார் சிறுகதைத் தொகுப்பு புகழ் பெற்றது. இவருடைய குழந்தை எழுத்துப் பணிகளைப் பாராட்டி குழந்தை எழுத்தாளர் சங்கம் தனது ஆறாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் இவருக்கு 1979ஆம் ஆண்டில் கேடயம் வழங்கி கௌரவித்துள்ளது.

நன்றி
குழந்தை இலக்கிய முன்னோடிகள், ஆர்.வி.பதி

நாளை

# நமதே

குறிக்கோளை

முடிவுசெய்தபின்

அதற்கான

முயற்சிகளில் மட்டுமே

கவனம் செலுத்துங்கள்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com